சார்பு நீதிமன்றம் உத்தமபாளையம்

நாள்: 10.11.2025 OS 260/2020

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெகநாதன் | தொழில் | : | |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |
| | | பி.வா.சா.1 | | | |

---

<u>முதல் விசாரணை</u>

நான் வழக்கின் 2ம் பிரதிவாதி. பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சி. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தை எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்துள்ளேன் அதைப் படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

இறந்து போன மணிகண்டன் எனது தகப்பனார். அவர் வாதியிடம் கடன் வாங்கியதாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வாதி அறிவழகன் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். நாங்கள் மூன்று நபர்களும் எங்கள் வழக்கறிஞரை வைத்து வக்காலத்து தாக்கல் செய்து வழக்கு நடத்தி வருகிறோம். வழக்கு சம்பந்தமாக எங்கள் 3 நபர்களுக்கும் அசல் வழக்கில் தபால் துறை மூலமாகவும் அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். வாதி நீதிமன்றத்தில் தீர்ப்புக்கு முன் உடன் ஜப்தி செய்ய வேண்டுமென மனு தாக்கல் செய்து, அந்த மனுவிலும், எங்களுக்கு நோட்டீஸ் வந்தது என்றால் சரிதான். அந்த அழைப்பாணையில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் மேலுள்ளது என் தாயார் கையெழுத்து தான். அதே இடைக்கால மனுவில் தபால் மூலமாக வந்த நோட்டீஸ்சையும் நானும் எங்கள் தாயாரும் பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான்.

எதிர்வழக்குரையில் உள்ள 1, 2 கையொப்பம் எங்களுடையது தான். எனது தகப்பனாரும், தாயாரும், 24.05.2004 ல் முத்தையா என்பவரிடம் இருந்து

கிரையம் வாங்கிய கிரைய ஆவணம் என்னிடம் காட்டப்படுவது தான் அது வா.சா.ஆ.9 ஆகும். வாதி என் தகப்பனார் இறந்தவுடன் எங்களிடம் என் தந்தை கடன் வாங்கியதாகவும், அதனால் பணம் திருப்பி தரவேண்டும் என கேட்டார். பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். சிவில் பிரச்சனை என்பதால் கோர்டிற்கு போக சொல்லிவிட்டார்கள். 2020 மார்ச் அல்லது ஏப்ரல் மாதம் புகார் கொடுத்திருப்பார்.

நான் சொல்வது போல் காவல்நிலையத்தில் வாதி எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும், நான் கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 26.02.2020ல் வழக்கறிஞர் மூலமாக வாதி நோட்டீஸ் அனுப்பினார் என்றால் சரிதான். அந்த நோட்டீஸை நாங்கள் பெற்றுக்கொண்டோம் என்றால் சரிதான். அதற்கு நாங்கள் பதிலறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் கொரோனா காலக்கட்டம் என்பதால் அனுப்வில்லை. என் தந்தை கடன் வாங்கிய காரணத்தினால் தான், நாங்கள் வழக்கறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. கொரோனா காலம் என்பதால் தான் அனுப்பவில்லை. நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வா்க்குமூலத்தில் என் சொத்தை குறைந்த விலைக்கு அறிவழகன் கேட்டார் என சொல்லியுள்ளேன்.

என் அப்பா, அம்மா இருக்கும்போது நாங்கள் விற்க வேண்டும் என்பதால் கேட்டார். அவர் குறைந்த விலைக்கு கேட்டதால் நாங்கள் கொடுக்க சம்மதிக்கவில்லை. நாங்கள் கிரையம் கொடுக்கவில்லை என்பதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாக எதிர்வாதம் செய்து வருகிறோம். 04.05.2017 அன்று வாதி என் தந்தைக்கு ரூ.6,00,000/- கடன் கொடுத்து என் தாயார் சாட்சி கையெழுத்து போட்டு, வழக்கு 1வது புரோநோட்டை என் தந்தை எழுதிக்கொடுததுள்ளார் என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ளது என் தந்தை கையொப்பம் அல்ல, சாட்சி கையொப்பம் என் தாயார் போடவில்லை. 1வது புரோநோட்டில் என் தந்தை தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அதில் உள்ள சாட்சி கையொப்பம் என் தாயார் போட்டது என்றால் சரியல்ல. 02.07.2017

அன்று வாதி என் தந்தைக்கு ரூ.50,000/- கடன் கொடுத்து நான் சாட்சி கையெழுத்து போட்டு, வழக்கு 2வது புரோநோட்டை என் தந்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ளது என் தந்தை கையொப்பம் அல்ல, சாட்சி கையொப்பம் நான் போடவில்லை. 2வது புரோநோட்டில் என் தந்தை தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அதில் நான் தான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

என் தந்தை கடன் வாங்கியபோது சொத்துக்குறிய பட்டாவை கொடுத்துள்ளார் என்றால் சொத்தை விற்பனை செய்ய முயற்சிக்கும்போது கொடுத்திருக்கலாம். கடன் வாங்கும்போது கொடுக்கவில்லை. நானும், என் தாயாரும் கையெழுத்தை மாற்றி மாற்றி போடும் பழக்கம் உடையவர்கள் என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லப்பட்டுள்ள பிராது தொகையை பெற்றுக்கொண்டு என் தந்தையார் 2 புரோநோட்டை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், அந்த கடன் உண்மையான கடன் என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லப்பட்டுள்ள கடனை செலுத்துவதற்கு நான் கடமைபட்டவர் என்றால் சரியல்ல. என் தந்தை விட்டுச்சென்ற வீட்டை நான் தான் அனுபவித்து வருகிறேன். பிராது படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு புரோநேட்டுகளில் உள்ள கையொப்பங்களை வல்லுநர் ஆய்வுக்கு அனுப்பி நிரூபணம் செய்ய நான் தயாராக உள்ளேன் என்றால் சரிதான்.

ஓம் M.சிவாஜி செல்லையா,
சார்பு நீதிபதி,
உத்தமபாளையம்.